පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය

பொலிஸ் ஊடகப் பிரிவு

POLICE MEDIA DIVISION

சுகுறுபாய, பத்தரமுல்லை

තැ.පෙ.අංකය
த. பெ.இ
Po.Box No — 10120

ෆැක්ස්
தொலைநகல்
Fax — 011-2171635

දුරකථන
தொலைபேசி
Telephone — 011-2887973 (HUNTING)

වෙබ් ලිපිනය
இணையதளம்
Web Site — www.Police.lk

ඊ මේල්
மின்னஞ்சல்
E-mail — dir.media@police.gov.lk


මගේ අංකය
எனது இலக்கம்
My NO — 1778/2024

ඔබේ අංකය
உமது இலக்கம்
Your No — / 2024

දිනය
திகதி
Date — 29/11/2024
நேரம் - மணி

# ஊடக அறிக்கை

**தலைமை ஆசிரியர் / செய்தி ஆசிரியர்,**
**செய்தி பணிப்பாளர்/ செய்தி முகாமையாளர்**
**சகல ஊடக நிறுவனங்கள்.**

**நாட்டில் ஏற்பட்ட சம்பவங்கள் மற்றும் முக்கியச் செய்திகள் தொடர்பாக பொலிஸ் ஊடகப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களை ஊடகங்களுக்கு தெரியப்படுத்தல்.**

## 01. மனித படுகொலை - கதிர்காமம் பொலிஸ் பிரிவு.

28.11.2024 அன்று காலை வேளையில் கதிர்காமம் பொலிஸ் பிரிவிட்குற்பட்ட செல்லக் கதிர்காமம் பிரதேசத்தின் ரஜ மாவத்தையில் பெண் ஒருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கதிர்காமம் பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

செல்லக்கதிர்காமத்தில் வசிக்கும் 34 வயதுடைய பெண்ணொருவரே இக் கொலைச் சம்பவத்தில் மரணமடைந்துள்ளார்.

கணவர் மனைவிக்கிடையில் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக கணவரால் கோடரியால் தாக்கப்பட்டதில் மனைவி மரணமடைந்துள்ளதாக விசாணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபரான கணவர் தற்போது தலைமறையாகியுள்ளார். இவரை கைது செய்வதற்கு கதிர்காமம் பொலிசார் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

## 02. துப்பாக்கிச் சூடு நடாத்தி மனிதப் படுகொலை செய்வதற்கு எத்தணித்த சந்தேக நபர்கள் இருவர் துப்பாக்கியுடன் கைது - மேல் மாகாண தெற்கு பிராந்தியக் குற்றப் பிரிவு.

14.11.2024 அன்று ஹோமாகமை பொலிஸ் பிரிவிட்குற்பட்ட வைத்தியசாலை வீதி பிரதேசத்தில் மோட்டார் சைக்களில் வருகைத் தந்த இரண்டு சந்தேக நபர்கள் வீடொன்றுக்குள் புகுந்து துப்பாக்கி சூடு நடாத்தப்பட்டு படுங்காயங்கள் விளைவித்த

குற்றங்கள் தொடர்பாக மேல் மாகாண தெற்கு பிராந்திய குற்றப் பிரிவினர்களால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விசாரணை உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய குற்றத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவர் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த வேளையில், மீகொடை பொலிஸ் பிரிவிட்குற்பட்ட எட்டிகலை பிரதேசத்தில் வைத்து அவர்களை கைது செய்து, அவர்களிடமிருந்து 3.8 மி.மீ வகைத் தோட்டாக்களைச் செலுத்தக் கூடிய வெளிநாட்டு தயாரிப்பு ரிவோல்வர் ரக துப்பாக்கி மற்றும் அதன் 06 தோட்டாக்களும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் 23 மற்றும் 26 வயதுடைய கொழும்பகே ஆர மற்றும் மீகொடை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள போதைப் பொருள் கடத்தல்காரரின் அறிவுறுத்தலுக்கமைய இத் துப்பாக்கிச் சூடு நடாத்தப்பட்டது எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும், சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது போதைப் பொருள் கடத்தல்காரர் வழங்கிய ஆலோசனைக்கமைய தற்போது சிறையில் அடைக்கப்பட்டு சிறைவாசம் அனுபவிக்கும் நபர் ஒருவரின் குடும்ப உறுப்பினரை கொலை செய்யும் நோக்குடனே மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளதாக சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர். அச் சந்தர்ப்பத்திலேயே அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

இச் சம்பவங்கள் தொடர்பாக மேல் மாகாண தெற்கு பிராந்திய குற்றப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**பொலிஸ் ஊடகப் பிரிவு**